அரசியல் எதிரிகளை அலக்கழிக்கும் 'காங்கிரஸ் பாதுகாப்புசட்டம்!'

ஜனநாயக ஆட்சியா? பயங்கரச் சட்ட நடமாட்டமா?

போராட்ட காலத்தில் துணை செய்தோர் செல்வாக்கு காலத்தில் சீரழிவதா?

Phone No. 4502 [விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458 [இலங்கை 10 சதம்]

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழர் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (31—12—49) வெளியூர் (1—1—50) [இதழ் 131

காங்கிரஸ் ஆட்சியாளரைக் கதரவைக்கும் 'கிளர்ச்சிப் பேய்!'

இந்தியாவில் இன்று நடப்பது உண்மையான ஜனநாயக ஆட்சி தானா? அல்லது ஆளுங் கட்சியினரின் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடத்தப்படும் நாடகமா? காங்கிரஸ் எந்தக் கொள்கையை எதிர்த்து ஆரம்பத்தில் தோன்றியதாகக் கருதப்பட்டதோ, எந்தக் கொள்கையை எதிர்த்து அது போராடி வந்ததாகக் கூறப்பட்டதோ, அந்தக் கொள்கை—நீதி நேர்மையற்ற சட்ட திட்டம்—இன்று நாட்டை அலக்கழிக்கிறது!

திறந்த நீதிமன்றங்களில் விசாரிக்கப் பெறாமல், குற்றச்சாட்டுகள் கூட இன்னின்னவை யென்று கூறப் பெறாமல் நூற்றுக் கணக்கானோர் சிறையில் தள்ளி வாட்டப்பெற்று வருகின்றனர். சிறையில் இப்படித் தள்ளுண்டு கிடப்போர் அரசியல்வாதிகளென்பது உண்மைதான்! ஆனால் கொண்ட கொள்கையைப் பெரிதென மதித்துத்தானே அவர்கள் எதற்குந் துணிந்து முன் வந்தனர்!

இன்று சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் கொள்கைகள் சரியா, தவறு என்பது ஒரு புறமிருக்கட்டும்; அது ஒரு தனிப் பிரச்னை! தங்கள் மீது சுமத்தப் பெறும் குற்றச் சாட்டுகளைப்பற்றிய தீர்ப்பை, நீதிமன்றத்தின் மூலமறிய அவர்களுக்கு உரிமை யிருக்க வேண்டாமா? ஜனநாயக நாடெனக் கூறப்படும் எதிலும் எந்தக் குடிமகனுக்கும் இருக்க வேண்டிய சாதாரண உரிமை தானே இது!

இது பற்றிய கடைசி வழக்கு ஜபல்பூரினின்றும் கிடைக்கப் பெறுகிறது. மத்திய மாகாண சர்க்கார் பொது பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அஜேசௌரா என்ற இளைஞரை சிறைபிடித்தது பற்றிய சம்பவமாகும்.

அஜே கைது செய்யப்பட்டபோது ஜான்முளம் ஏ.(பொருளாதாரம்) இறுதி வகுப்பு மாணவராவார் லக்ஷ்மன்சிங்சௌஹானும், காலஞ்சென்ற திருமதி குமாரி சௌஹானும் ஈன்றெடுத்த சேயாவார். தோழர் அஜே. தோழர் லக்ஷ்மன்சிங் சௌஹான் மாகாணத்திலேயே பழம்பெருங்காங்கிரஸ் பிரமுகராவார். திருமதி சௌஹான் பிரபல கவிஞரசியாவார் காங்கிரஸ் போராட்டக் காலங்களில், பன்முறை சிறைசென்றிருக்கின்றனர் இவர்களிருவரும்.

லக்ஷ்மன்சிங் சௌஹான் 1942 போராட்டக் காலத்தில் வேலூர் சிறையில், தற்போதைய மத்திய மாகாணப் பிரதமர்-உள்நாட்டு லாகா மந்திரியோடு ஒரே அறையிலிருந்து சிறைவாசம் அனுபவித்தவராவார்.

பெற்றோர்கள் 1942-ல் சிறைக் கூடம் நண்ணிய காலத்தில், அஜெய்க்கு வயது 14. அந்த இளம் வயதில் பெற்றோரின்பரா...

பாதுகாப்பையும் இழந்த அஜே, ஜபல்பூர் தெருக்களில் பிச்சையெடுக்க வேண்டிய நிலைமைக்கும் வந்துற்றார்.

சுதந்தரப் போராட்டக் காலத்தில், தாய் தந்தையரின் நற்றுணையைப் பெற்ற அதே அஜே, இன்றுதனது செல்வாக்குக் காலத்தில் தனயனை விசாரணையின்றி காவலில் வைத்துள்ளது-பாதுகாப்பு கைதியான மகுடமகுடி!

தன் மீது சாத்தப் பெற்றிருக்கும் குற்றச்சாட்டுகளின்

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

ஆமதாபாத்—ஜேம்ஷெட்பூருக்கு அதிக "கிராக்கி!"

லங்காஷயர் வீழ்கிறதாம்!

லண்டன், டிச. 30—

இந்திய ஜவுளி தரத்திலாகட்டும், விலையிலாகட்டும் உலக மார்க்கெட்டுகள் விரும்பி வாங்கும்படி யிருப்பதால் அந்த வியாபாரம் மிகவும் வலுத்துவருகிறது என்று, இங்குள்ள வட்டாரங்களில் கூறப்படுகிறது.

மலேயா, இந்திய ஜவுளியையே அதிகமாக ஏற்றுமதிசெய்கிறதென்றும லங்காஷயர், ஜப்பான் இவைகளுக்கு இந்தியா பெரும் போட்டியாகக் கிளம்பி யிருக்கிறதென்றும இங்கு கூறப்படுகின்றன.

பிரிட்டனுக்கு அனுப்பப்பட்ட இந்த ஜவுளி 'சாம்பிள்கள இங்கு மிகவும பிடித்திருக்கிறதென்றும இதற்காக ஆர்டர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றனவென்றும் 'மான்செஸடர் கார்டியன்' கூறுகிறது.

பாகிஸ்தானுக்கு ஜவுளி ஏற்றுமதி செய்யப்படவில்லையே தவிர உலகின் இதர பாகங்களுக்கெல்லாம் இந்திய ஜவுளி அனுப்பப்பட்டே வருகிறது.

இலங்கை, சூடான், ஆஸ்திரேலியா, ஏடன், பர்மா, பிரிட்டிஷ் மேற்கு ஆப்பிரிக்கா, பிரிட்டிஷ் கிழக்கு ஆப்பிரிக்கா ஆகிய இடங்களுக்கெல்லாம் இந்திய ஜவுளி ஏற்றுமதிசெய்யப்பட்டுவருகிறது.

எகிப்தில் பொதுத் தேர்தல்

கெய்ரோ, டிச. 30—

எகிப்து போர் முடிந்தபின் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல் ஜனவரி 3-ல் ஆரம்பமாக விருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை எல்லாம் ... பாஷா சர்க்கார் ... செய்து விட்டனர்.

தேர்தல்களில் ..., லஞ்சம் ... எதுவும் நடைபெறாமல் கண்காணிக்கப்படும்.

"1947-48 வகுப்புக் கலவரத்தில் காங்கிரஸ் பங்கு"!

அ. இ. கா. கமிட்டி உறுப்பினர் மீது ஒழுங்கு நடவடிக்கை!

புதுடில்லி, டிச. 30—

கிழக்குபஞ்சாபைச் சேர்ந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் தோழர் அப்துல் கனி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது பற்றி காங்கிரஸ் காரியகமிட்டி ஆலோசித்து வருகிறது.

தோழர் கனி 1947-48ல வகுப்புக் கலவரத்தில காங்கிரஸின் பங்கு' என்று ஒரு புத்தகத்தை எழுதியிருந்ததாகவும் அதில் பல காங்கிரஸ் தலைவர்களைத் தூற்றியிருந்ததாகவும் கூறப்படுகிறது. இப்புத்தகத்திற்கு சர்க்கார் ஏற்கனவே தடைவிதித்திருக்கின்றனர்.

மாலை மணி

சென்னை 31—12—49 சனிக்கிழமை

ஜனநாயக மணம்

“ஒரு ஜனநாயக அரசாங்கம் வெற்றி பெறுவது என்பது திறமுள்ள எதிர்க்கட்சி இருப்பதையும், வலிவுள்ள நிலையான மந்திரிசபை அமைவதையும் பொறுத்திருப்பதாகும். பொதுமக்களின் பிரதிநிதித்வம் வாய்ந்த அரசாங்கங்கள் இரண்டு மூன்று கட்சிகளோடு நன்கு வளரமுடியுமா என்று நாம் அடிக்கடி விவாதம் புரிகிறோம்; ஆனால், ஜனநாயக ஆட்சியின் தன்மையைப் பற்றி சிறிதளவாவது தெரிந்து கொண்டிருக்கும் யாரும், ஜனநாயக ஆட்சியை ஒரே ஒரு கட்சியைக்கொண்டு நடத்திச் செல்லமுடியும் என்று ஒரு போதும் கனவு காணமுடியாது. எதிர்க்கட்சி கூடாது; எதிர்ப்பு கட்சிகளுக்குள்ளேகூட கூடாது’ என்ற கொள்கை ஜனநாயகப் பண்புக்கு மாறுபட்டது. என்பது மட்டுமல்லாமல் அது நாஜிமனப்பான்மையின் அடியாகப் பிறக்கும் முழக்கம் என்று குறிக்கப்படும். நல்ல பிரதிநிதிவம் கொண்ட அரசாங்கம் கலிவுள்ள ஒரு எதிர்க்கட்சியை மட்டுமல்ல திறனுள்ள எதிர்க்கட்சியைக் கொண்டிருக்க வேண்டும். அந்த எதிர்க்கட்சி மாற்று அரசாங்கமாக விளங்கவேண்டும்.

என்று, சென்னையில் நடைபெற்ற இந்திய அரசியல் விஞ்ஞான மாநாட்டினரை வரவேற்புக் குழுவின் சார்பில் நின்று வரவேற்றுப் பேசுகையில், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் சா. ஏ. இலட்சுமணசாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். காலத்திற்கு ஏற்ற—தேவையான—அரிய கருத்தை அவர் கூறியிருப்பது மிகவும் பாராட்டுவதற்குரியதாகும்.

இன்று நடைபெறும் மாகாண-மத்திய காங்கிரஸ் ஆட்சி முறைகளை நன்கு ஊன்றிக் கவனித்தால், மேற்கூறப்பட்ட ஜனநாயகப்பண்பு அடியோடு அழிக்கப்பட்டுவிட்டது என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம். இன்று ஆட்சிப்பீடம் ஏறியிருக்கும் காங்கிரஸ் தலைவர்கள், தங்கள் கட்சியாகிய காங்கிரஸ் கட்சி ஒன்றுதான் ஏக போகமாக நின்று என்றென்றும் ஆளவேண்டும் என்றும், காங்கிரஸுக்கு எதிராகக் கட்சி ஏதும் இருக்கமுடியாது-இருக்கக் கூடாதென்றும் எழுதியும் பேசியும் வருவது, ஜனநாயகப் பண்பை எவ்வளவு கேலிக் கூத்தாகக் கருதி வருகிறார்கள் என்பதற்கு ஏற்ற சான்றாகும். ஆளும் கட்சிக்கு எதிராக நாணயமான கொள்கை-திட்டம்-கோட்பாடு ஒழுங்கு-முறை இவற்றோடு ஒரு கட்சி உருவாகிறது, என்று தெரிந்தால், அதனை முளையிலேயே கருக்கி விடவேண்டும் என்று கருதி, இன்றைய காங்கிரஸ் அரசாங்கம், அடக்குமுறைக் தீப்பிழம்புகளை எதிர்க்கட்சியின் மீது வீச சிறிதும் தயங்குவதில்லை. அதற்கு எடுத்துக்காட்டு வேண்டுமென்றால், திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற, சீரிய நோக்கங்கொண்ட கழகத்தை அடக்கு முறைகொண்டு பல விதத்திலும் அடக்க முயற்சிப்பதும், சட்ட மன்றத்தில் எதிர்க்கட்சியினரின் பேச்சைக்கேட்க மறுப்பதும், அவர்களை மிக மிகக் அலட்சியப்படுத்துவதும் ஆகிய இவையே போதுமான சான்றுகளாகும்.

“இன்றைய காங்கிரஸ் அரசாங்கத்தில், பெரும்பாலான காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் பலரும் பலவேறு வகைப்பட்ட சட்டதிட்டங்களை தம் கற்பனை மனம் போனவாறெல்லாம் தீட்டி அவற்றை விரைவுபட அடித்தடித்துச் சட்டங்களாக நிறைவேற்றுவதில் தனி சாமர்த்தியங்கொண்டிருப்பதாக நினைக்கிறார்கள். அவை பொது மக்களைத் திணறடிக்கின்றன என்பது மட்டுமல்லாமல், சில சமயங்களில் எனக்கே என்ன சட்டம் நிறைவேற்றப்பட்டது என்று தெரியாமல் போய்விடுகிறது” என்று டாக்டர் ஏ. இலட்சுமணசாமி சட்டமன்றத்தின் மேலிக்கூத்தை விளக்கிக் காட்டுகிறார். டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்கள் அறிஞர்-ஒரு மேல்சபை உறுப்பினர். அவர் பாடே இந்த நிலையில்வைக்கப்படுகிறதென்றால், மற்ற ‘கதர்த் துணிக் காங்கிரஸ் அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே’ என்ற காங்கிரஸ் “அண்ணுத்தைகளின் நிலைமையைப் பற்றி என்ன எண்ணுவது?

அரசியல் விஞ்ஞான அறிவு இந்நாட்டில் வளரவில்லை. அப்படியே சிறிதளவு வளர்கிறது என்றாலும் அதை அழிக்க “நாஜிமனப்பான்மை” கொண்ட காங்கிரஸ் ஆளவந்தார்கள் முன்னிற்கிறார்கள். டாக்டர் இலட்சுமணசாமி அவர்களைத் தவிர மாநாட்டைத் திறந்துவைத்த சர். சி. பி. ராமசாமியும், தலைமை வகித்தவரும், மற்றும் பேசிய பலரும் வலிவுள்ள-திறமையான எதிர்க் கட்சியைக் கொண்டிருக்க வேண்டிய ஜனநாயக அரசாங்கத்தின் தன்மையைத் தெள்ளத் தெளிய விளக்கியுள்ளார்கள். மத்திய-மாகாண அரசாங்கங்கள் காங்கிரஸ்காரர்களின் நன்மைக்காகவே வைத்துக் காப்பாற்றப்படுவனவாகக் காணப்படுகின்றனவேயல்லாமல், பொது மக்களின் நன்மைக்காக இருப்பதாகத் தெரியவில்லை. எனவேதான், எதிர்க் கட்சி ஒன்று முளை எடுத்தால், அதனை அழித்துவிடும் வேலையில்முனைகிறார்கள் போலும் காங்கிரஸ்காரர்கள்!

“நாட்டின் பொது தேசியப் பற்றைக் காட்டிலும், பொருளாதாரப் பேதத்தைக் காப்பாற்றுவதில் மக்களின் கவனம் சென்றாலும், மதம், இனம் ஜாதி மொழி பேதங்களைக் காப்பாற்றுவதில் கவனஞ் சென்றாலும் நிரந்தரமான அமைச் சிறுபான்மைச் சமுகங்கள் இருந்தாலும், அங்கு ஒரு நல்ல ஜனநாயகம் உருவாவது என்பது மிகமிகக் கடினமாகும்” என்று சர். ஏ. எல். முதலியார் குறிப்பிடுகிறார். அத்தகைய பேதங்களையெல்லாம் நிரந்தரமாக வைத்துக் காப்பாற்றும் பழைமைச் சாதனங்களை எல்லாம் காங்கிரஸ் காவல் புரிந்து வரும்வரையில் டாக்டர் அவர்கள் கூறுகிற நல்ல ஜனநாயகம் எப்படி உருவாகும்? அக்காரணம் பற்றிதான் திராவிட முன்னேற்றக்கழகம், ஒரு குறிப்பிட்ட ஒழுங்கும், நிலையுமுள்ள திராவிட நாட்டின் பரப்பில் அத்தகைய பேதங்கள் அனைத்தையும் ஒழித்து ஜனநாயகச்சமதர்மக் குடியரசை நிறுவப்பாடுபட்டு வருகிறது. அது பற்றிய அறிவுப்புரட்சியை மக்களித்தில் உண்டாக்கி வருகிறது.

நாட்டின் வளப்பம்-வதன் தொழிற்சாலைகள் - வாணிகம்-பண்டமாற்று - கல்வி - பொது சுகாதாரம்— இனஒற்றுமை— அரசியல் கட்டுக்கோப்பு ஆகிய வற்றைப் பெருக்கவும், அவற்றிற்கு ஆதரவு காட்டவும், அவற்றை வைத்துக்காப்பாற்றவும் ஒரு நாட்டின் ஜனநாயக சக்திகள் ஒன்று திரளவேண்டும் என்று அவர் அழகுற குறிப்பிடுகிறார் அந்த நன்னோக்கத்தை அடிப்படையாகக் கொண்டுதான், திராவிடத்தில் ஜனநாயகமணம் கமழவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபடுகிறது. அதற்கு மாறாக, ஏககட்சி அரசாங்கம் தன் கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு நிற்கிறது!

அன்னிய-சுரண்டல் பாசிச ஆதிக்க ஆட்சியை ஒழித்து, ஜனநாயக மணம் சமழும் நல்லாட்சியைத் திராவிடத்தில் நிலைநாட்டி, மற்ற நாடுகளுக்கு ஒரு எடுத்துக் காட்டாக அதனை விளங்கச் செய்பவே திரண்டெழுவீர் திராவிடர்கள் என்று, அரசியல் விஞ்ஞான மாநாடு நடைபெறும் இந்த நாளில் திராவிடரனைவர்க்கும் வேண்டுகோள்விடுகிறோம்!

அறிவுக் கதிர்!

❋

பகுத்தறிவு இயக்கம் பரவுவதில் நான் அதிகம் நம்பிக்கைக் கொண்டிருக்கிறேன். அதனால் நமது நாட்டிற்குப் பெரிதும் பயன் கிடைக்குமென்று நம்புகிறேன். ஆனால் திட்டத்தோடு நிறுவப்பட்ட பகுத்தறிவு இயக்கம் எதையும் பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாது.

—பண்டித நேரு.

1937-ல் சிங்கப்பூர் ‘சிபாம்’ பத்திரிகை நிருபருக்களித்த பேட்டியில் கூறியது.

பார்மோசா மீது படையெடுக்க சீனக் கம்யூனிஸ்டுகள் ஆயத்தம்?

சோவியத் ரஷ்யா துணைபுரியுமாம்

வாஷிங்டன், டிச. 30—ரஷ்யாவின் உதவியுடன் பார்மோசா மீது படையெடுக்க சீன கம்யூனிஸ்டுகள் ஆயத்தம் செய்து வருவதாக, இங்கு செய்திகள் கிடைத்திருக்கின்றன.

மூன்று ரஷ்யக் கப்பல்கள், மீன் பிடிக்கும் கப்பல்கள் என்று சொல்லிக் கொண்டு சரிசெயன் கவிழ்ந்து மேற்கோவுக்கு புறப்பட்டிருப்பதாக புடைட் ஸ்டேட்ஸ் இராணுவம் தகவல் வெளியிட்டிருக்கிறது. மற்ற கடல் வழியாக இம்மாதிரி பல கப்பல்கள் சென்றிருப்பதாகவும் கூறப்படுகிறது.

பர்மா தீவுகளுக்கிடையே மூன்று ரஷ்யக் கப்பல்கள் இருந்தமல் இனத்தன் காணப்பட்டதாம்.

யு. எஸ்ஸுக்கு மெக்ஆர்தர் வற்புறுத்தல்

பார்மோசா, கம்யூனிஸ்டுகள் வசமாகி விட்டால் ஜப்பான்—பிலிப்பைன் இடையேயுள்ள அமெரிக்க தொடர்பு அறுந்துவிடும் என்றும், ஆகவே பார்மோசாவிலிருந்து படையெடுப்பை உடைக்க ஒரு இராணுவ தூதுகோஷ்டியை அனுப்ப வேண்டுமென்றும் யு. எஸ். சர்க்காரிடம் மெக்ஆர்தர் வற்புறுத்தி இருப்பதாக கூறப்படுகிறது.

நாணய மதிப்பு ஜப்பானிலும் குறைக்கப்படும்

லண்டன், டிச. 30—ஜப்பானும் தன் நாணய மதிப்பை சீக்கிரமே குறைக்கக் கூடும் என்று தெரியவருவதாக, இங்குள்ள நிதி வட்டாரங்களில் கூறப்படுகிறது.

நாணய மதிப்பு குறைக்கப்படாததால், ஏற்றுமதி மிகவும் பாதிக்கப்படுகிறது என்று ஜப்பானிய வியாபாரிகள் கருதுகிறார்கள் என்றும், ஜப்பானிலுள்ள அமெரிக்க அதிகாரிகள் நாணய மதிப்புக் குறைப்பை விரும்பவில்லை; எனினும், கடைசியில் தன் ‘யென்’ நாணய மதிப்பை ஜப்பான் குறைக்கும்படியாகவே நேரும் என்று இங்கு கருதப்படுகிறது.

ஐ. நா. கொடிமறைவில் கள்ள வியாபாரம்!

டாமஸ்கஸ், டிச. 30—சில மோட்டார் டிரைவர்கள் தங்கள் கார்முன் ஐ. நா. கொடியைப் பறக்கவிட்டுக்கொண்டு எல்லைகளை ஒளித்துச் சென்று போவதாக, சிரியா லெபனிஸ் மோதலைக் வுக்கவில் வியாபாரிகளுக்கு அதிகரித்திருக்கிறது.

அக்குழுத் தலைவர்கள் ஐ. நா. அதிகாரிகள் ஆகியோர் காரில் இருந்தால்தான் ஐ. நா கொடியைக் காரில் பறக்கவிட வேண்டும் என்று ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இக்குழுவில் யோசனை கூறியிருக்கிறது.

அரசியல்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

‘யோக்யதை’ பற்றி சவால் விடுத்துக்கேட்டுள்ளார் அஜே. நீதி மன்றத்தில் தன்னைக் கொண்டுபோய் நிறுத்துமாறு அரசியலாளரையும் அறைகூவி அழைத்துள்ளார்.

ம. மா. சர்க்கார் பிரதம காரியதரிசிக்கு அவர் விடுத்துள்ள முடங்கலொன்று கூறுவதாவது:—

‘எங்கள் குடும்பத்தின் மீது பகைமை கொண்ட பற்பல காங்கிரசார், எங்களைப் பற்றி அவதூறுகப் பேசிவருகிறார்களென்பது எனக்குத் தெரியும். இந்தக் குறும்புக்குப் பொறுப்பாளிகள் அவர்களே என்றும்யார்மூலமாகவேபுனைபட்ட தகவலைத் தந்து இச்சதி வேலையைப் புரிந்திருக்கிறார்களென்றும் சந்தேகிக்கிறேன். இன்றைய சர்க்காரும். அதன் அதிகாரிகளும் தங்களுக்கு வேண்டியவர்களைத் திருப்தி செய்ய சுயேச்சை எண்ணம் படைத்த இவ்வாலிபனை வாட்ட முனைவந்திருக்கிறதென்றே கான் கருதுகிறேன். நாட்டின் தந்தை ‘மகாத்மா காந்தி’யின் தலைமையின் கீழ் சுதந்திரப் போராட்டம் நடத்தியது, இச்சுயேச்சை எண்ணம் வளர வேண்டுமென்பதற்காகத்தானே!” |

அஜேயின் கதையே சுதந்திர இந்திய சிறைக்கூடங்களில் விசாரணையின்றி பூட்டப்பட்டுக்கிடக்கும் ஆயிரக்கணக்கானோரின் கதையுமாகும்.

கிளர்ச்சிசெய்யும் வழிமுறைகளைக்காங்கிரஸ்தான் மக்களுக்குக் காட்டிக்கொடுத்தது அப்போது நடந்த கிளர்ச்சி, அந்நிய ஆட்சியை எதிர்த்து நடந்ததாகும். இப்போது புதிய அமைப்பின் கீழ், தங்கள் துயரைத் துடைக்குமாறு காங்கிரசை எதிர்த்து மக்கள் கிளர்ச்சி செய்வார்களேயாயின், சட்டம் இருக்கிறது நீதி வழங்க-அதைப் பிரயோகிப்பதுதானே முறை!

உரிமைகளுக்காகப் போராட வேண்டுமென்பதை, மக்கள் காங்கிரசிடமிருந்துதான் கற்றுக்கொண்டனர். அரசியல் விடுதலைக்கும், பிரஜா உரிமை பெறுவதற்கும் நடந்த போராட்டத்தில கிளர்ச்சிப்படையே தலைவிரித் தாடிற்று. அப்போது அட்டூழியர்கள் காங்கிரஸ் ஆட்சியாளரையே கதிகலங்க வைக்கின்றன.

‘ஆமாம்’ போடும் ‘அண்ணன்மார்’களை மட்டுந்தான் காங்கிரஸ் ஆட்சி தட்டிக் கொடுக்கப்போகிறதா? மற்றவர்களைக் குறைகளைக் கூறி, நியாயம் விரும்புவோரை விசாரணையின்றி காவலில் வைத்து வாட்டத்தான் போகிறதா? அப்படியாயின், அது ஜனநாயகமாகுமா?

—‘பிளிட்ஸ்’

சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக

முதல் மாநாடு

15-1-50 ஞாயிறு காலை 8-மணிக்கு

சென்னை மிருகக் கண்காட்சி சாலைக்குப் பின்புறம் அமைந்துள்ள

"அழகிரி பந்தலில்" நடைபெறும்

தலைவர்:- **சேலம் ஏ. சித்தையன்**

துவக்குபவர்:- மதுரை எஸ். முத்து

சொற்பொழிவாளர்கள் பலரும் கலந்துகொள்வார்கள்

இரவு 9-30 மணிக்கு சி. என். ஏ., கே. ஆர். ஆர். நடிக்கும்

நாடகம் நடைபெறும்.

சிதைந்த சித்திரம்

"ரவி"

செந்தமிழ் நாட்டவர் ஆளவந்தார்—இனிச்
சிறப்புறும் தமிழ் என்றெண்ணமிட்டோம்-உன் [illegible]ம்
நொந்திட இந்தியை நுழைந்[illegible] தனல்-தமிழர்
சிந்தையைப் போருக் கழைத்துவிட்டார்!

ஒடுக்கப் பட்டவர் ஆளவந்தார்-இனிக்
கொடுப்பார் சுதந்திரம் என்றிருந்தோம்-உண்மை [யைத்
தடுத்திடும் சட்டமே போடுகிறார்-பதவி
பிடித்திட தேர்தலை நாடுவதால்!

ஏழையர் தோழர் ஆளவந்தார்-இனி
ஏழையர் வாழுவர் என்றிருந்தோம்-குடிக்கும்
கூழையும் குடித்திடல் தட்டிவிட்டார்-வயிறு
கூனிய முதுகுடன் ஒட்டிடவே!

சென்னையை ஆள்பவர் தென்னாட்டார்-மக்கள்
சிறப்பில் வாழ்வர் என்றிருந்தோம்-வடவர்
சொன்ன படியே செய்கின்றார்-தமிழர்
இன்ப வாழ்வினைக் கொய்திடவே!

வேற்றுமை பொறுத்தவர் ஆளவந்தார்-உலகு
போற்றவே ஆளுவர் என்றிருந்தோம்-மதச்
சீற்றங் கொண்டோரிடம் சேர்ந்துவிட்டார்-நச்சு
ஊற்றுப் பொய்கையில் சார்ந்துவிட்டார்!

எத்தனை கனவுகள் கண்டிருந்தோம்-நாடு
முத்தமிழ்ச் சுவையுடன் வாழுமென்று! -எண்ணச்
சித்திரத் தொழிலைச் சிதைத்துவிட்டார்-மக்கள்
சித்தம் மிகவும் [illegible] தைபதைக்க!

★ மதிப்புரை ★

திருக்குறள் இசைப் பாடல்கள் (அறத்துப்பால்)

[ஆசிரியர்: பாவலர். சொ. வேலாயுதசாமி; வெளியீட்டோர்: தென்றல் நற்பணிப் பக் கழகம், சங்கண்டபுரம், சேலம் மாவட்டம்; விலை ரூ 0-8-0]

செவிக்கின்பம் பயப்பது மாத்திரமே இசையென சிலர் கருதுகிறார்கள். உண்மையான இசை அப்படியன்று. செவிக்கின்பம் விளைவிக்கும் அதே நேரத்தில் இதயத்துக்கும் இன்பம் தந்து, மனித அறிவைப் பண்படுத்தும் ஆற்றல் வாய்ந்த இசையே இசையெனப்படும். செவிக்கின்பம் பயப்பது ஒன்றே இசைப்பயனைத் தரவல்லது என்று சொன்னால், இசைக் கருவிகள் மூலம் இசைக்கப்படும் இசையே போதும். ஆனால், நாம் அத்துடன் மனநிறைவு கொள்கின்றோமா? இல்லையே! தமிழிசை வேண்டுகிறோம், அதிலும் பொருள் நயம், சொல்நயம் தேடுகின்றோம்.

எனவே இசையெனப்படுவது சுவை மட்டுமின்றி பயனுடையதாகவும் அமைதல் வேண்டும். அத்தகைய பண்பும் பயனும் ஒரு சேரப் பாடப்பட்ட பாடல்கள் தாம் இந்த திருக்குறள் இசைப் பாடல்கள். ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு குறளும் அதன் கருத்தும் பொதிந்து பாடப்பட்டுள்ள பாடல்களின் தொகுப்பே இது. இதில் அறத்துப்பால் கருத்துகள் அனைத்தும் அடங்கியுள்ளன. பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற முறைப்படி பாடல்கள் அமைந்துள்ளன. ஏற்ற பண்ணில் இசைத்துப் பாடலாம்; [illegible] கருத்[illegible] டில் யாவும் பயந்[illegible] திருக்குறள் இசைப் பாடல்[illegible] வழி [illegible] என நம்புகிறோம். இந்நூலாசிரியர் ஆசிரியர் முயற்சியையும் பாராட்டுகிறோம்.

* * *

சினிமா ஒழிக!

[ஆசிரியர்: சேலம்: வெளியீட்டோர்: கலை அண்ணா 53 ஜூலை ஐ ரோட் சென்னை-7 விலை: அணா 4.]

"திராவிடன்" பத்திரிகை வாயிலாக சினிமாவுலகை சீர்திருத்தும் நற்பணியை மேற்கொண்டிருக்கும் தோழர் சோசன் அவர்களால் எழுதப்பட்டுள்ள 'சினிமா ஒழிக' என்னும் இச்சிறு வெளியீடு சினிமா ஒரு கலைதான் என்பதைச் சுட்டிக் காட்டி, அதே சமயத்தில் பட முதலாளிகளின் பேராசையினால் அந்தக் கலை நம் நாட்டு மக்களின் நிலையை உயர்த்துவதற்குப் பதிலாக எப்படி யெல்லாம் பாழ்படுத்தப்படுகிறது என்பதை விளக்கிக் காட்டுகிறார். அத்துடன் சினிமாக்கள் நாட்டு மக்களிடையே மூடப்பழக்க வழக்கங்களை வளர்க்கும் பழக்கத்தையும் வன்மையாகக் கண்டிக்கிறார். சினிமா மக்களை மக்களாக வாழ ஒழிபோல வேண்டும் என்கிறார். ஆனால் சினிமாவுலகில் காணப்படும் குறைகளைக் கண்டு சகியாமல், அப்படிப்பட்ட சினிமாக்கள் ஒழிந்தால்தான் நல்லது என்கிறார். கருத்து மிக்கச் சண்டனம் நிரம்பியுள்ளன இந்நூலில்.

* * *

கலை வளர்ந்த கதை

[ஆசிரியர்:- சக்திதாசன் அம்பணியன்; வெளியீட்டாளர்:- ஸ்ரீ வெங்கட்டரமணா அண்ட் கம்பெனி; சென்னை-1; விலை அணா 4]

இச்சிறு நூல் கலை வளர்ந்த வரலாற்றினைச் சுருக்கச் சொல்லி விளக்க வைக்கிறது. கலை கலைக்காகவே உள்ளது என்ற பேச்சு பலவ[illegible] நாம் [illegible] கலை பாமர மக்களின் வாழ்வுக்கு வளம் தருவதாகவும் இருக்க வேண்டும் என்கிறார் இந்நூலாசிரியர். நூல்படிக்க வேண்டிய நூலே.

* * *

கன்னித்தாய்

[ஆசிரியர்:- [illegible] சாமி; வெளியீட்டோர்: [illegible] தமிழ் [illegible] நூல் [illegible] திருப்பூ[illegible] மன்றம்; விலை: ரூ 6.]

கொர்னம் என்னும் கன்னிப்பெண் ஒருத்தி தன் காதலனின் [illegible] ஒரு ஏழைக்குத் [illegible]

சமுதாய [illegible] விபசாரி என்ற பட்டம் சூட்டுகிறது. [illegible] சஞ்சீவி [illegible] அடைக்கலம் புகுகின்றாள் அக்கன்னி. [illegible] தானியில் [illegible] தந்தை யாரென்று தெரியவில்லை. இதுதான் கதையின் சாரம். சிறிய கதையேயாயினும் அரிய கருத்தை உள்ளடக்கியுள்ளது. படிக்க வேண்டியதே.

இனி நடப்பவை

சென்னை:—ஓட்டேரி தி. மு. கழகக் கிளையின் சார்பில், 1—1—50 ஞாயிறு காலை 10 மணிக்கு புலவர் வே. த. அர்ச்சனன் அவர்களால் திருக்குறள் வகுப்பு நிகழ்த்தப் பெறும். இடம்: எண். 21, பிரிக்லின் ரோட், ஓட்டேரி.

* * *

சென்னை-சென்னைத் திருவள்ளுவர் கழகத்தின் சார்பில் டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி எம். ஏ., பி. எச். டி. அவர்கள் திருக்குறளில்—"[illegible]ழ்" என்னும் பொருள் பற்றி 1—1—50 ஞாயிறு மாலை 6 மணிக்கு சொற்பொழிவாற்றுவார். இடம்:—புரசை, வைக்கோல்காரன் தெருவிலுள்ள நகராண்மைக் கழகப் பள்ளி.

* * *

சென்னை:— திருவல்லிக்கேணி தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 1—1—50 ஞாயிறு மாலை 5 மணிக்கு, பக்தவச்சலம் தெரு, கழகக் கட்டிடத்தில் நடைபெறும். உறுப்பினர் அனைவரும் தவறாது வருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

* * *

திருப்பூர்—இவ்வூர் திராவிட முன்னேற்ற இளைஞர் கழகச் செயற்குழுக் கூட்டம், 8/20 என்னுள்ள (தோழர் என். பால்ராஜ் அவர்களின்) இல்லத்தில் 1—1—50 ஞாயிறு இரவு 8 மணிக்கு நடைபெறும்.

* * *

தா. பழூர்:— இவ்வூர் தி. மு. க. கிளையின் துவக்கவிழா, 2—1—50 திங்கள் மாலை 5 மணிக்கு இவ்வூர் [illegible] தெருவில் அமைக்கப்பட்டிருக்கும் வேலாயுதம் மேடையில் நடைபெறும். அதுபோது தோழர்கள் சி. பி. சிற்றரசு, நா. இளஞ்செழியன் பீ. ஏ. (ஆனர்ஸ்), புலவர் குழந்தையா, மெத்தூசலா ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

1-1-50

திருச்சி:— திருச்சி மாவட்ட தி. மு. கழக மாநாடு

2-1-50

தா. பழூர்:— சி. பி. சிற்றரசு, நா. இளஞ்செழியன், புலவர் குழந்தையா, மெத்தூசலா.

3-1-50

அருப்புக்கோட்டை:— சி. என். அண்ணாதுரை, கஞ்சி கல்யாணசுந்தரம், ச. வெ. அ. வள்ளிமுத்து.

திருச்சி மாவட்ட தி. மு. கழக மாநாடு

நிகழ்ச்சி நிரல்

காலை 8—5 .... கொடியேற்றல் (தலைவர்)
8—15 .... திராவிட நாட்டுப் பண் இசைத்தல்
8—30 .... மாநாட்டைத் துவக்கி வைத்தல்
9—0 .... வரவேற்புரை
9—15 .... தலைவர் தேர்தல்
9—45 .... தலைமையுரை
10—30 .... தோழர்கள் சொற்பொழிவு
12—30 .... இடைவேளை (உணவு)
பிற்பகல் 1—30 .... தீர்மான ஆய்வுக் குழுக் கூட்டம் (விஷயாலோசனை)
2-15 .... மாநாடு துவக்கம்
2—20 .... தீர்மானங்கள்
4—30 .... பொதுச் செயலாளர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் சொற்பொழிவு
6-30 .... தலைவர் முடிவுரை
7—0 .... செயலாளர் நன்றி நவிலல்
இரவு 9—30 .... 'சந்திர மோகன்' நாடகம்.

குறிப்பு:-மாநாட்டில் தலைவர்களுக்கு மாலை அணிவித்தல் கூடாது.

சென்னை 2-வது வட்டம் தி. க. கழக உறுப்பினர் கூட்டம்

சென்னை 2-வது வட்டம் திராவிடக் கழக உறுப்பினர் கூட்டம் இராயபுரம், பனைமரத்தொட்டி வடவண்டை மாதா கோவில் தெரு, க. சண்முகனார் இல்லத்தில் 1—1—50 ஞாயிறு காலை பத்து மணிக்கு நடைபெறும்.

பொருள்:—எதிர்கால அமைப்பு முறை பற்றியும், நிர்வாக உறுப்பினர் தேர்தலும் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன் என செயலாளர் வி. ராசு வேண்டுகிறார்.

பர்மியப் பிரதமரின் 'க்ஷேத்திராடனம்!'

பர்மியப் பிரதம மந்திரி தகின் நு ஜனவரி மாதக் கடைசியில் இலங்கையிலுள்ள அனுராதபுரா முதலிய பௌத்த ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்லப்போகிறார் என்றும் 'க்ஷேத்திராடனமே' அவருடைய நோக்கமென்றும் அரசியல் சம்பந்தமான எந்த விவகாரத்திலும் அவர் பேசமாட்டார் என்றும் தெரிகிறது.

அவர் இலங்கை சர்க்காரின் விருந்தினராக தங்கியிரு[illegible]

மத்திய சர்க்காருடன் ஐதராபாத் நிர்வாக இணைப்பு

கிருஷ்ணமாச்சாரி கமிட்டி இணைப்புத் திட்டம்

ஐதராபாத் பற்றி இந்திய சமஸ்தானங்கள் நிதி விசாரணைக் கமிஷன் சமர்ப்பித்துள்ள உப அறிக்கை இப்பொழுது பிரசுரத்திற்கு வெளியிடப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காருடன் இந்த சமஸ்தானத்தின் அரசியல் சட்ட உறவு நிர்ணயிக்கப்பட்ட பிறகு வெளியிடப்படலாமென இவ்வறிக்கை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. மற்ற சமஸ்தானங்கள், சமஸ்தான யூனியன்கள் விஷயத்தில் சிபாரிசு செய்துள்ளது போலவே, ஐதராபாத் நிதிவிவகாரங்களை மத்திய சர்க்கார் நிதி விவகாரங்களுடன் இணைத்து ஒன்றுபடுத்துவதற்கான திட்டமொன்று இவ்வறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது.

அரசியல் சட்ட நிலைமை நிர்ணயிக்கப்பட்ட பிறகு, இந்தியா அங்கீகரிக்கப்படுவதற்கு ட்டு, நிதி விசாரணைக் கமிட்டியின் சிபாரிசுகளை சிற்சில மாறுதல்களுடன் இந்திய சர்க்காரும் ஐதராபாத் சர்க்காரும் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். உள்நாட்டு சுங்க வரி விதிப்பு ஏற்பாட்டை படிப்படியாக மூன்று வருஷங்களில் ரத்து செய்துவிட வேண்டுமென்று கமிட்டி சிபாரிசு செய்திருந்தது. இதை நான்கு ஆண்டாக மாற்றியிருப்பது இதில் செய்யப்பட்டுள்ள முக்கியமான தொரு மாறுதலாகும்.

இதர சமஸ்தான யூனியன்கள் விஷயத்திலும், மைசூர் சமஸ்தானம் விஷயத்திலும் அனுசரிக்கப்பட்டுள்ள கொள்கையே இச்சமஸ்தானத்தில் ராணப்பாம் சூழ்நிலையையும், சமஸ்தானத்தின் நிதி விவகாரங்கள் சீர்குலைந்து போகாமல் தவிர்க்க வேண்டியதன் அவசியத்தையும், அடுத்த பத்து வருஷங்களில் மாகாணத்தில் அந்தஸ்தைப் பூரணமாக அடையும் வகையில் சீராக மாறுதல் இடையூறின்றி, அமைதியாக நடைபெறும்படி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் பொறுத்து, தக்க மாறுதல்களுடன் ஐதராபாத் விஷயத்திலும் அனுசரிக்கப்பட்டுள்ளன. கிருஷ்ணமாச்சாரி கமிட்டியின் பிரதான அறிக்கையில் விரிவாகக் கூறப்பட்டுள்ள இக்கொள்கைகள் சுருக்கமாகப் பின்வருமாறு. புது அரசியலமைப்பு அமுலுக்கு வந்த பிறகு, மத்திய சர்க்காருக்கும் சமஸ்தானங்களுக்குமுள்ள உறவு மத்திய சர்க்காருக்கும் மாகாணங்களுக்குமுள்ளதைப் போலவே இருக்கும் சமஸ்தான சர்க்காரின் தற்போதைய அலுவல்கள் மத்திய சர்க்காரின் அலுவல்கள் மாகாண சர்க்காரின் அலுவல்கள் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு மத்திய வருமான இனங்கள், செலவு, சர்விஸ்கள், ஆஸ்திகள் கடன்கள் முதலியவை சம்பந்தமான பணப் பொறுப்பும், நிர்வாக அதிகாரமும் 1950 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து மத்திய சர்க்காரால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். சமஸ்தானத்தின் நிதி நிலைமை திடீரென்று சீர்குலைந்து போய்விடாமல் தடுக்கும் பொருட்டு, இந்த மாறுதல் படிப்படியாக நடைபெற்று, பத்து வருஷங்களில் பூர்த்தியாகும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காருக்கு மாற்றப்படும் சமஷ்டி அலுவல்களில், வருமானவரி மத்திய சுங்கவரி, ரயில்வேக்கள், தபால் தந்தி-டெலிபோன், நாணயச் செலாவணி. நாணயசாலை, பாதுகாப்பு, ராஜ்ய சேவைகள், விமானப் போக்குவரத்து, ஒலிபரப்பு, வானிலை ஆராய்ச்சி, தொல்பொருள் ஆராய்ச்சி. பூதத்துவ ஆராய்ச்சி, இன்ஷ்யூரன்ஸ், கணக்...

பொழுது போக்கு

தமிழ்—நாடகம்

ஒற்றைவாடை	—	இமயத்தில் நாம்
வி. பி. ஹால்	—	சக்குபாய்

தமிழ்—சினிமா

பாரகன்	—	வாழ்க்கை
லட்சுமி	—	,,
மகாராணி	—	,,
கிரௌன்	—	இன்பவல்லி
கெயிட்டி	—	,,
சயானி	—	,,
பிராட்வே	—	பூர்வ ஜென்மம்...
வெலிங்டன்	—	,,
சரஸ்வதி	—	மனோன்மணி
சினிமா சென்ட்ரல்		உத்தமபுத்திரன்
ஈபாலி	—	மாயக் குதிரை
சன்	—	அசோக்குமார்
பிரைட்டன்	—	சக்ரதாரி

தெலுங்கு

செலக்ட்	—	பிரம்மரதம்

ஆங்கிலம்

Minerva	—	The Gal who Took the West
Casino	—	Fighting Father Dunne
New Globe	—	Look for the Silver Lining
New Elphinstone	—	Adam Had Four Sons
Midland	—	The Barkleys of Broadway
Roxy	—	On an Island with you

ஹிந்தி

அசோக்	—	அந்தாஜ்
பிராட்வே	—	சிந்தி
சாகர்	—	ஜூ
சித்திரா	—	நாடியா-க-பார்
ஸ்டார்	—	அமரி

தென்னாப்பிரிக்கர்களுக்கு அடையாளச் சீட்டு

கேப்டவுன், டிச. 30—தென் ஆப்பிரிக்காவிலுள்ள ஐரோப்பியர், இந்தியர்கள், கறுப்பர்கள் இவர்களுக்கு வெவ்வேறு அடையாளச்சீட்டுகளைக் கொடுப்பது பற்றிய விஷயம் ஜனவரி 20-ந் தேதி தென்னாப்பிரிக்க யூனியன் பார்லிமெண்டில் உள்நாட்டு மந்திரி தோழர் டோங்க் ஜெஸால் கொண்டுவரப்படவிருக்கிறது. இந்த அடையாளச் சீட்டு ஏற்படுத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் எல்லாம் பூர்த்தியாகிவிட்டனவாம்.

...தனிக்கை ஆகியவை அடங்கியிருக்கும்.

ஹைதராபாத் நாணயம்

ஹைதராபாத்தில் நாணயச் செலாவணி நிர்வாகம் சம்பந்தமான முழுப் பொறுப்பையும் 1950 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து மத்திய சர்க்காரே மேற்கொண்டு விட வேண்டுமென்று கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது. ஹைதராபாத் நோட்டுகள் நாணயங்கள் ஆகியவற்றின் நாணய மதிப்பை ரத்துசெய்ய வேண்டுமா, அப்படியானால் எப்பொழுது ரத்துசெய்ய வேண்டும் எந்த முறையில் செய்ய வேண்டும் என்பதை மத்திய சர்க்கார் நிர்மானித்துக்கொள்ள வேண்டும். அதுவரை, சமீபசெலாவணி நிலவர விதியும், உபயோகமாகிய விகித ஹைதராபாத் நாணய உறுதி நிலவர விதியும் அந்தந்த நிதிக்கு சட்டபூர்வமாக ஏற்பட்டுள்ள பொறுப்புகளையும், நாணய வட்டத்தில் மேற்கொள்ள மத்திய சர்க்கார் நிர்ணயித்துள்ள செலாவணி நாணயக் கொள்கையையும் பொறுத்து, தனித்தனியே நிர்வகிக்கப்படவே வேண்டுமென்றும் கமிட்டி கூறுகிறது.

கோவை மாவட்ட
திராவிட முன்னேற்றக் கழக

முதல் மாநாடு

கணியூரில்
21-1-50 ஞாயிறு காலை 8-மணிக்கு
"அர்ச்சுனன் பந்தலில்"
நடைபெறும்

தலைவர்:— ப. உ. சண்முகம்
(திருவண்ணாமலை நகரசபைத் தலைவர்)
துவக்குபவர்:— ஜி. பி. சோமசுந்தரம்
(பேளுக்குறிச்சி)
தோழர் சி. என். ஏ. மற்றும் பலரும்
கலந்துகொள்வர்

இரவு 'சந்திரமோகன்' நாடகம்
நடைபெறும்

கே. ஏ. முருகேசன்
செயலாளர்
பி. பழனிச்சாமி
வரவேற்புத் தலைவர்
கே. என். ஏ. முத்து
எம். உதுமான்
துணைச் செயலாளர்கள்.

ஆர். மீனாட்சிசுந்தரம்
பொருளாளர்.
டி. வெங்கடாசலம்.
விளம்பர உறுப்பினர்

இந்தியா—பிரிட்டன் உறவு ரப்பராக....!

லிபரல் கட்சி அதிகாரத்திற்கு வரவேண்டுமாம்!

லண்டன், டிச. 30—பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் லிபரல் கட்சியின் அபேட்சகராக போட்டியிடவிருக்கும் சர்தார் அஹ்லுவாலியா இந்தியாவுக்குப் பிரயாணமானர்.

அவர் புறப்படுமுன் நிருபர்களிடம் கூறுகையில், பிரிட்டனில் லிபரல் கட்சி அதிகாரத்திற்கு வந்தால், இந்தியாவுக்கும், பிரிட்டனுக்குமிடையே உறவு அதிகரிக்கும் என்றும், இங்குள்ளவர்களுக்கு 'மகாத்மாவின்'தத்துவங்களை இந்தியா விளக்க வசதி அதிகரிக்கும் என்றும் கூறினர்.

பிரிட்டனும் இதர காமன்வெல்த் நாடுகளும் வெகு சீக்கிரமே அந்நிய உதவியை எதிர்பார்க்காமலேயே பலம் பெற்றுவிடும் என்றும் அவர் கூறினர்.

சர்தார் அஹ்லுவாலியா, ஹைகமிஷனர் கிருஷ்ணமேனனுடன் எடுத்துக்கொண்ட போட்டோ ஒன்று. சிலபத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருப்பதை ஒரு நிருபர் குறிப்பிட்டு, இதனால் அவர் அபேட்சைக்கு இந்திய சர்க்கார் ஆசி அளித்திருக்கிறது என்று அர்த்தமா எனக் கேட்டார்.

அதற்கு அவர் பதிலளித்ததாவது:- "எந்த அரசியல் நோக்கத்துடனும் அந்த 'போட்டோ' எடுக்கப்படவில்லை தேர்தல் பிரசாரத்திற்கும் அதற்கும் சம்பந்தமேயில்லை. என அபேட்சைக்கும் இந்திய சர்க்காருக்கும் எவ்வித தொடர்புமில்லை"

அஹ்லுவாலியா இப்பொழுது தொழிற் கட்சி, கன்சர்வேடிவ் கம்யூனிஸ்டு கட்சிகளின் அபேட்சகர்களை எதிர்த்துப் போட்டியிட வேண்டியிருக்கிறது.

14—1—50
பொங்கலன்று
வெளிவருகிறது!
NATIONAL CALL
(நேஷனல் கால்)
திராவிடர் ஆங்கில வார இதழ்
தனிப் பிரதி 0—2—0
ஆண்டு சந்தா 6—0—0
விற்பனையாளர்கள் தேவை.
விவரங்கட்கு:— பொறுப்பாளர்,
நேஷனல் கால்,
15, குப்பைய்ய செட்டித் தெரு,
சென்னை—17.

மூல வியாதிக்கு
கருணைக்கிழங்கு லேகியம்
மூல மூளைகள், ரத்தம், சீழ் வடிதல், மூலப் பவுத்திரம, கட்டி, நீர்க் கசிவு, ரணம் சுகமாகும்; வாய்வு, அஜீரணம், மலபந்தம் நீங்கும். 3 நாளில் குணம்தெரியும்.
12 நாள் மருந்து ரூ. 3—0—0
12 நாகபஸ்பம ரூ. 2—0—0
P.S.R. பங்கஜம் வைத்யசாலை
பழனி (S. I.)

ஐ. நா. பாதுகாப்பு சபைக்கு சோவியத் 'நோட்டிஸ்!'

சீன தேசிய சர்க்காரின் பிரதிநிதியாக டாக்டர் டி. எப். ஸியாங் ஐ. நா. பாதுகாப்பு சபையில் சீன மக்களின் உண்மையான பிரதிநிதியாகமாட்டார் என்றும், அப்படி அவரை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் சோவியத் யூனியன் டிச. 29-ந் தேதியன்று பாதுகாப்பு சபைக்கு நோட்டிஸ் பிறப்பித்துள்ளது.

வானொலி

(1-1-50 ஞாயிற்றுக்கிழமை)

சென்னை [211·3 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
8-30 பாப்பா மலர்
9 00 கே. குஞ்சமணி-மிருதங்கம்

பிற்பகல்:

1-00 வி. ஆர். சந்திரா-குரலிசை
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 நேயர் விருப்பம் (இ. த)
2-00 தமிழில் செய்திகள்
3-00 கே. வி. நாராயணசாமி—பாட்டு, டி. பாலசுப்ரமணியம்—வயலின், நாராயணசாமி பிள்ளை—மிருதங்கம்

மாலை:

4 00 சதம்பம் (இ. த.)
5-30 இசை விழா ஒலிப்பதிவு
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 என். மீனாட்சி—பாட்டு
6-45 எஸ். விஸ்வநாதன்-பாட்டு

இரவு:

7-15 தமிழில் செய்திகள்
7-30 குரலிசை (இசைத்தட்டு)
8 00 இசை விழா (ஒலிப்பதிவு)
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 ஆர். எம் மகாதேவன்—பேச்சு
9-30 டி. பி. ராஜகோபாலன்—பாட்டு
10-30 முடிவு

திருச்சி [325·8 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 காலை இசை (இசைத்தட்டு)
8-30 டி. பி. எ. முத்து, குமாரசாமி—வீணை

பிற்பகல்:

12-00 சதம்பம் (இசைத்தட்டு)
1-00 மணிமலர்
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சி.எஸ். கிருஷ்ணன் (ஒலிப்பதிவு)
2-00 தமிழில் செய்திகள்
2 10 பெண்ணுலகம்
2-30 நேயர் விருப்பம் (இ. த.)

மாலை:

5 30 சென்னையில் உள்ளபடி
6 00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 சித்ரகானம் (இசைத்தட்டு)
6-30 இராம கீர்த்தனைகள்

இரவு:

7-15 தமிழில் செய்திகள்
7-45 என். சாமா—பேச்சு
8 00 சென்னையில் உள்ளபடி
9 00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 சென்னையில் உள்ளபடி
9-30 சென்னையில் உள்ளபடி
முடிவு

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.